**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 70/2020 |
| Name | : Kannappan |
| P.W. | : 7 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**26.03.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மடத்துக்குளம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 25.01.2019 ம் தேதி தலைமை காவலராக பணியில் இருந்த போது கணியூர் முருகேசன் மகன் கவியரசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 23/2029 இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து உடுமலை நீதித்துறை நடுவர் எண். 2 க்கும் மற்றும் அதன் ஒரு நகலை மேல் விசாரணைக்கு காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இவ்வழக்கில் புகார் கொடுப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்

ஒரு நாள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல தகவல் கொடுப்பதில் தாமதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காயம்பட்டவர் அவசர சிகிச்சை பிரிவில் பேச முடியாத நிலையில் இருந்தார் என்றும் உடன் இருந்த புகார்தாரர் புகார் கொடுப்பததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார் யாரால், எங்கு வைத்து எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில் எந்த புகாரும் கொடுக்கப்படவில்லை என்றும், அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.03.26 19:01:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்